

நம்பகதன்மையுடைய சோலார் விற்பனையாளரை எப்படித் தேர்வு செய்வது?

PM Surya Ghar: Muft Bijli Yojana அதிகாரப்பூர்வ தளத்தில் அங்கீகரிக்கப்பட்ட (empanelled) விற்பனையாளர்கள் பட்டியலிடப்பட்டிருப்பார்கள். அவர்களில் ஒருவரை தேர்ந்தெடுக்கலாம். இந்த திட்டத்தின் மூலம் நிறுவும் அமைப்பிற்கு அவர்கள் 5 ஆண்டுகள் உத்தரவாதம் மற்றும் விலையில்லா சேவையை வழங்க வேண்டும். இல்லையெனில் அவர்கள் நீக்கப்படுவார்கள்! 👍



நா ம் சூரிய மின் அமைப்பை PM SURYA GHAR: MUFT BIJLI YOJANA திட்டத்தின் மூலமாக இல்லாமல் தன்னிச்சையாக நிறுவிக்கொள்ளலாமா ?

நிறுவிக்கொள்ள முடியும். ஆனால், PM SURYA GHAR திட்டம் மூலம் நிறுவும்போது தரம், உத்தரவாதம், உறுதிப்படுத்தப்படுகிறது. 👀.



சோலார் அமைப்பை நிறுவுவதற்கு பாதுகாப்பு சான்றிதழ் தேவையா ?

உங்கள் அமைப்பின் திறன் 10kW க்கு மேல் இருந்தால் பாதுகாப்புச் சான்றிதழ் தேவை.



எனது மீட்டர் நிறுவல் தாமதமானால் என்ன செய்வது?

TNPDCL வலைத்தளத்தில் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தில் (CGRF) புகார் அளிக்கவும் அல்லது முதல்வரின் முகவரி இணையதளத்தைப் பயன்படுத்தவும்.



சூரிய மின்கலங்களுக்கு காப்பீடு உள்ளதா ?

ஆம்! திருட்டு, சேதம் மற்றும் இயற்கை பேரழிவுகளுக்கு எதிராக உங்கள் அமைப்பை நீங்கள் காப்பீடு செய்யலாம்.

# மேற்கூரை சோலார் - உங்கள் கேள்விகளுக்கான பதில்கள்

CAG
Citizen consumer and civic Action Group

**Citizen consumer and civic Action Group**
**No.103, First Floor, Eldams Road, Teynampet, Chennai - 600018**
**Phone Number: +91-44-2435 4458 | Email: helpdesk@cag.org.in**
**Website: www.cag.org.in**

சூரிய மின்கலங்கள் இயங்கும்போது அவற்றைத் தொடுவது பாதுகாப்பானதா?

உங்கள் சோலார் அமைப்பு முறையாகப் புவித்தொடுப்பு பாதுகாப்பு செய்யப்பட்டிருந்தால் அவற்றை தொடும்போது எந்த பாதிப்பும் ஏற்படாது.

சோலார் அமைப்பு ஒரு நாளிற்கு எவ்வளவு மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது, அதை அமைப்பதற்கு எவ்வளவு இடம் தேவைப்படுகிறது?

உங்கள் இருப்பிடத்தைப் பொறுத்து, 1 kW அமைப்பு ஒரு நாளைக்கு 4 முதல் 6 யூனிட்களை உற்பத்தி செய்யும். 1 kW அமைப்புக்குச் சுமார் 60 முதல் 100 சதுர அடி நிழல் படாத இடம் தேவைப்படும்.

ஒரு சோலார் அமைப்பின் ஆயுட்காலம் என்ன?

பேனல்கள்: 25– 27 ஆண்டுகள் உத்தரவாதம்
இன்வெர்ட்டர்கள்: 5–10 ஆண்டுகள் உத்தரவாதம்
PM Surya Ghar திட்டத்தின் கீழ், அனைத்து உதிரிபாகங்களுக்கும் 5 வருட முழு உத்தரவாதம் உள்ளது.

சோலார் அமைப்பை எவ்வாறு பராமரிக்க வேண்டும்?

பேனல்களை மாதத்திற்கு ஒரு முறை அல்லது இரண்டு முறை சுத்தம் செய்யுங்கள் - குறிப்பாக தூசி நிறைந்த பகுதிகளில்.

சோலார் அமைப்பிற்கு ஜி.எஸ்.டி வரி எவ்வளவு ?

திட்ட மதிப்பில் 70% மீது 12% ஜி.எஸ்.டி வரி
திட்ட மதிப்பில் 30% மீது 18% ஜி.எஸ்.டி வரி
➡️ ஏறத்தாழ மொத்தம் ~13.8% ஜி.எஸ்.டி வரி

# மேற்கூரை சோலார் - உங்கள் கேள்விகளுக்கான பதில்கள்

CAG
Citizen consumer and civic Action Group

Citizen consumer and civic Action Group
No.103, First Floor, Eldams Road, Teynampet, Chennai - 600018
Phone Number: +91-44-2435 4458 | Email: helpdesk@cag.org.in
Website: www.cag.org.in